## செய்தி வெளியீடு

பல்வேறு தொழில்களை புரிகின்ற மக்களின் பசியினை போக்கும் உன்னதத் தொழிலாம் உழவுத் தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும், அந்தத் தொழிலை மேற்கொண்டு வரும் உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

அந்த வகையில் விவசாயிகள் தங்களின் விளை பொருட்களை பாதுகாப்பாக இருப்பில் வைத்து, அவற்றிற்கு நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்யும் வகையிலும், உழைப்பின் பலன் உழவர்களுக்கு முழுமையாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், எடைபோடும் இயந்திரங்கள், எடைமேடைகள், ஈரப்பதமானி போன்ற வசதிகளுடன் கூடிய 18 நவீன சேமிப்புக் கிடங்குகள் மற்றும் 50 குளிர்பதனக் கிடங்குகள் ஆகியவற்றை 37 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சிறு மற்றும் குறு விவசாயிகள் பயிர்க் கடனை திரும்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும், விளைபொருட்களை நீண்ட நாட்கள் பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது என்பதாலும், அறுவடை முடிந்தவுடன் கிடைத்த விலைக்கு தங்கள் விளை பொருட்களை விற்றுவிடுகின்றனர். இதன் காரணமாக, தாங்கள் விளைவித்த விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

இதன்படி, 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 18 நவீன சேமிப்புக் கிடங்குகள், ஒவ்வொன்றும் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 21.60 கோடி ரூபாய் செலவில், திருவண்ணாமலை விற்பனைக்குழுவின், ஆரணி மற்றும் தேசூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்; ஈரோடு விற்பனைக்குழுவின் வெள்ளக்கோவில், அலங்கியம் மற்றும் மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்; வேலூர் விற்பனைக்குழுவின் கலவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்; விழுப்புரம் விற்பனைக் குழுவின் அவலூர் பேட்டை மற்றும் திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்; நாகப்பட்டினம் விற்பனைக் குழுவின், குத்தாலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், ராமநாதபுரம் விற்பனைக் குழுவின், தேவக்கோட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், கோயம்புத்தூர் விற்பனைக் குழுவின், செஞ்சேரி மற்றும் ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், தருமபுரி விற்பனைக் குழுவின் ஊத்தங்கரை ஒழுங்குமுறை விற்பனை கூடம், தேனி விற்பனைக் குழுவின், சின்னமனூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம், திருவாரூர் விற்பனைக் குழுவின், மன்னார்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், திருச்சி விற்பனைக் குழுவின், பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், கடலூர் விற்பனை குழுவின், காட்டு மன்னார்கோவில் மற்றும் குறிஞ்சிபாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஆகிய 18 இடங்களில் ஊரக சேமிப்புக் கிடங்குகள். கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதேபோன்று, 25 மெட்ரிக் டன் கொள்ளவில், குளிர்பதன கிடங்கு ஒன்றிற்கு 31 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வீதத்தில், 15 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில், திருவண்ணாமலை விற்பனைக்குழுவின், செங்கம், போளூர், திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், கடலூர் விற்பனைக் குழுவின், கடலூர் விற்பனைக் கூடம், ஈரோடு விற்பனை விற்பனைக் குழுவின், சத்தியமங்கலம், கொடுமுடி, அந்தியூர், பூஞ்சம்புளியம்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், வேலூர் விற்பனைக் குழவின், வேலூர், திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், திருச்சி விற்பனைக் குழுவின், பெரம்பலூர், மற்றும் கரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், கோயம்பபுத்தூர் விற்பனைக் குழுவின், செஞ்சேரி, ஆனைமலை, அவினாசி, அன்னூர், தொண்டமுத்தூர் மற்றும் உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், விழுப்புரம் விற்பனைக் குழுவின்,

விழுப்புரம் மற்றும் உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், தருமபுரி விற்பனைக் குழுவின், அரூர், பென்னாகரம், போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், ராமநாதபுரம் விற்பனைக் குழுவின், ராஜபாளையம், அருப்புக்கோட்டை, சிங்கம்புனேரி, மற்றும் கமுதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், சேலம் விற்பனைக் குழுவின், ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, திருச்செங்கோடு, பரமத்தி வேலூர், கெங்கவல்லி மற்றும் சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், திண்டுக்கல் விற்பனைக் குழுவின், பழநி, திண்டுக்கல் மற்றும் கோபால்பட்டி ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், கன்னியாகுமரி விற்பனைக் குழுவின், திங்கள் சந்தை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தஞ்சாவூர் விற்பனைக் குழுவின், தஞ்சாவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தேனி விற்பனைக் குழுவின், தேனி மற்றும் கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், மதுரை விற்பனைக் குழுவின், திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், திருநெல்வேலி விற்பனைக் குழுவின், தூத்துக்குடி, திருநெல்வேலி, வள்ளியூர், கோவில்பட்டி, எட்டயபுரம், தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் புதுக்கோட்டை விற்பனைக் குழுவின், ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகிய 50 இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், உணவுப் பதப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அறியும் வண்ணம் உற்பத்தியைப் பெருக்கி, நாட்டிலுள்ள விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்; மாநிலத்தின் வேளாண் திட்டங்களுக்கும், உணவுப் பதப்படுத்தும் தொழில் பிரிவின் வளர்ச்சிக்கும் உதவிடுதல்; மாநில அரசு நிறுவனங்களுக்கும், மதிப்புக் கூட்டுதலுக்கான உட்கட்டமைப்புகளுக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதன் மூலம் வேளாண் விளைபொருட்களின் தேவையை அதிகரித்தல்; அறுவடை பின்செய் தொழில் நுட்ப மேலாண் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களில் தொழில் முனைவோருக்கு பயிற்சி அளித்து அவர்களின் தரத்தை மேம்படுத்துதல், உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கேற்ப, உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் தரத்திற்கும், சந்தை தேவைக்கும் உதவி செய்தல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் தமிழகத்தில் 2012-13 ஆம் ஆண்டு முதல், தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தினை செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிடடுள்ளார்கள்.

இந்த இயக்கத்தின் திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்த, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மாநில ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுவதற்கும், அத்துறையின் ஆணையரை இந்த தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தின் இயக்குநராக நியமனம் செய்வதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் இந்த இயக்கத்தின் நிர்வாகத்தை வலுப்படுத்துதல், தொலை நோக்கு திட்டத்தினை தயாரித்தல் மற்றும் இந்த இயக்கம் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக செலவிடப்படும் 1 கோடியே 50 லட்சம் ரூபாயில், மாநில அரசின் பங்களிப்பான 37.50 லட்சம் ரூபாயை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உததரவிட்டுள்ளார்கள்.

இந்த இயக்கத்தின் திட்டங்களை செயல்படுத்த, மாநில மற்றும் மாவட்ட அளவிலான பொதுக்குழு, மாநில அளவில் அதிகாரம் பெற்ற குழு, திட்ட கூர்ந்தாய்வுக் குழு, திட்ட ஒப்புதல் குழு மற்றும் மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கக் குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
நாள்:- 10.9.2012.